"Received of Copy"

ஊராட்சி ஒன்றியம்
27 SEP 2021
தேவகோட்டை

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
(வளர்ச்சிப் பிரிவு)
சிவகங்கை.

ந.க.ப்பி3 /9789/2020

நாள்: 20.09.2021

அரசாணை (4ப) எண்.15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை, நாள்: 17.08.2021, தனியருக்கு சார்பு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
சிவகங்கை.

20.9.2021

பெறுநர்:

திரு.ச.சதீஸ்குமார்,
இளநிலை உதவியாளர்,
தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம்.

..அலுவலகத் தலைவர் மூலமாக.
..இரு நகல்களில் ஒன்றினை சார்பு செய்து மீள அனுப்பிடும் பொருட்டு

நகல்:

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
தேவகோட்டை

தேவகோட்டை
ஊராட்சி ஒன்றியம்

ந.க.அ1/1890/2020 நாள் 29.9.2021
பணி வரன்முறை ஆணை சார்பு செய்யப்பட்டது

பெறுநர்
திரு. ச. சதீஸ்குமார்
இளநிலை உதவியாளர்
தேவகோட்டை ஊராட்சி
ஒன்றியம்

29.9.2021

வட்டார வளர்ச்சி அலுவலர்
வட்டார வளர்ச்சி
தேவகோட்டை.

29/9/21

26 AUG 2021

45320 சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ச.சரவணன் என்பவரின் மகன் திரு.ச.சதீஸ்குமார் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை**

அரசாணை (4ப) எண்.15

நாள்:17.08.2021.
பிலவ ஆண்டு, ஆவணி 01
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.பி3/9789/2020, நாள்:02.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.9946/2021/டி3, நாள்:15.06.2021.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டம், உதவி இயக்குநர்(ஊ) அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 09.03.2020 அன்று பணியிடைக் காலமான திரு.ச.சரவணன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ச.சதீஸ்குமார் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 04.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதாக குறிப்பிட்டு, அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது

குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.ச.சதீஸ்குமார் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 10.06.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.05.2000 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 20 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 20 என்றும், அவர் இடை நிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ச.சதீஸ்குமார் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 04.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 04.08.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.12873/டி-1/2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.23693/ஜி1/2021 நாள்:09.08.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை - 18/20.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-35
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.

**நகல்:**

திரு.ச.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, சிவகங்கை மாவட்டம்.
(**வழி**:மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி-1) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.